Australian Government
Department of Social Services



# கட்டாய சிறு வயதுத் திருமணம்

## திருமணம் செய்துகொள்ள எவரையும் கட்டாயப்படுத்துவது அவுஸ்திரேலியாவில் ஒரு மோசமான குற்றமாகும்.

திருமணம் செய்து கொள்ளலாமா இல்லையா, யாரைத் திருமணம் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவு செய்யும் சுதந்திரம் அவுஸ்திரேலியாவில் ஒவ்வொருவருக்கும் உண்டு. பொதுவாக, சட்டப்படி திருமணம் செய்து கொள்ள ஒருவர் **18** வயதிற்கும் மேற்பட்டவராக இருக்கவேண்டும். சில சூழ்நிலைகளில் **16** வயதிற்கு மேற்பட்ட ஒருவர் 18 வயதுக்கு மேற்பட்ட ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளலாம், ஆனால் இதற்கு நீதிமன்ற உத்தரவு தேவை.

எவரையேனும் திருமணத்துக்கு வற்புறுத்துவது, அச்சுறுத்துவது அல்லது தந்திரமாகச் சிக்க வைப்பது அவுஸ்திரேலியாவில் சட்டத்துக்குப் புறம்பானதாகும். ஒரு கட்டாயத் திருமணத்தைத் தூண்டுவதும் அல்லது அதனை ஏற்பாடு செய்ய உதவுவதும், நீங்கள் பாதிக்கப்பட்டவராக இருந்தாலேயன்றி ஒரு கட்டாயத் திருமணத்தில் ஒரு தரப்பாக இருப்பதும் கூட சட்டத்துக்குப் புறம்பானதாகும். இது சட்ட, கலாசார, சமயத் திருமணங்களுக்குப் பொருந்தும்.

திருமணம் செய்து கொள்ள இருவரும் சுதந்திரமாகச் சம்மதிக்கும்போது செய்யப்படும் ஏற்பாடு செய்யப்பட்ட திருமணமானது வலுக்கட்டாயத் திருமணத்திலிருந்து வேறுபட்டது. ஏற்பாடு செய்யப்பட்டு ஆகும் திருமணங்கள் அவுஸ்திரேலியாவில் சட்டப்படியானவையாகும்.

நீங்களோ உங்களுக்குத் தெரிந்த எவருமோ ஆபத்திலிருந்தால் **000** இல் பொலிசாரை அழையுங்கள்.

*அவுஸ்திரேலியாவிலுள்ள பொலிசார் பாதுகாப்பானவர்கள், நம்பத் தகுந்தவர்கள்.*

உங்களுக்கு ஓர் இலவச உரைபெயர்ப்பாளர் தேவையாயின் **131 450** ஐ அழையுங்கள்.

## கட்டாயத் திருமணத்திற்காக ஒருவரை இன்னொரு நாட்டிற்கு அழைத்துச் செல்வது அல்லது அனுப்புவது அல்லது இதைச் செய்ய இன்னொருவரை ஏற்பாடு செய்வது சட்டத்திற்குப் புறம்பானது.

ஒரு திருமணத்துக்கு வற்புறுத்துவதற்காக, சில வேளைகளில் ஆட்கள் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் அல்லது வெளிநாட்டுக்குச் செல்லத் தந்திரம் செய்யப்படுகின்றனர். இது சட்டத்துக்குப் புறம்பானதாவதுடன், சிறையில் அடைக்கப்படுவதை விளைவிக்கலாம்.

## நீங்களோ, அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருமோ ஆபத்தில் இருக்கிறீர்களா?

நீங்கள் அல்லது உங்களுக்குத் தெரிந்த எவரேனும் கட்டாய அல்லது சிறு வயதுத் திருமண இடர்ப்பாட்டில் இருந்தால், நீங்கள் உதவிக்காக அவுஸ்திரேலிய சமஷ்டிப் பொலிசாரை (**Australian Federal Police** (AFP)) **131 237** (131AFP) இல் தொடர்பு கொள்ளலாம், அல்லது **www.afp.gov.au** இல் AFP வலைத்தளத்துக்குச் செல்லலாம். AFP உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கலாம், உங்களுக்கு அறிவுரை வழங்கலாம், உதவிக்காக தங்குமிடம், நிதியுதவி, ஆலோசனை, சட்ட, குடிவரவு அறிவுரை என்பன போன்ற ஏனைய சேவைகளுக்குப் பரிந்துரைக்கலாம்.

மேலதிகத் தகவல்கள் **www.afp.gov.au** எனும் **AFP** வலைத்தளத்தில் கிடைக்கப் பெறும்.

## உங்களுக்கு உதவக்கூடிய மற்ற சேவைகள் அவுஸ்திரேலியாவில் உள்ளன.

**My Blue Sky** என்பது கட்டாயத் திருமணத் தடுப்பு, தகவல்கள், பரிந்துரைகள், இலவசச் சட்ட ஆலோசனை என்பவற்றுக்கு அர்ப்பணிப்பான அவுஸ்திரேலியாவிலுள்ள தேசிய வலைத்தளமும் உதவித்தளமும் ஆகும்.

**(02) 9514 8115** ஐ அழையுங்கள், **0481 070 844** இற்குத் தகவலனுப்புங்கள், **help@mybluesky.org.au** இற்கு மின்னஞ்சலிடுங்கள், அல்லது **www.mybluesky.org.au** என்ற ஆல டீடரந ளுமல வலைத்தளத்துக்குச் செல்லுங்கள்.

**1800RESPECT** என்பது 'அவுஸ்திரேலிய தேசிய பாலியல் தாக்குதல், வீட்டு, குடும்ப வன்முறை ஆலோசனைச் சேவை' (Australia's national sexual assault, family and domestic violence counselling service) ஆகும். இலவச, இரகசியமான தொலைபேசி, இணையவழி ஆலோசனையையும் தகவல்களைம் இது அளிக்கிறது. அறிவுரையாலோசகர்கள் நீங்கள் சொல்வதை செவிமடுத்துக் கேட்பர், உங்கள் கேள்விகளுக்கு பதிலளிப்பர், நீங்கள் வாழும் பகுதியிலுள்ள மற்ற ஆதரவு சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலக்கூடும்.

**1800 737 732** எனும் இலக்கத்தினை அழையுங்கள் அல்லது **1800RESPECT** இன் **www.1800RESPECT.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்

DSS1626.06.15

## உரைபெயர்ப்பாளர் ஒருவர் தேவையா?

**131 450** எனும் இலக்கத்தில் மொழிபெயர்ப்பு, உரைபெயர்ப்பு சேவையை **(Translating and Interpreting Service)** அழையுங்கள். மற்றச் சேவைகளுடன் தொடர்புகொள்ள TIS உரைபெயர்ப்பாளர் ஒருவர் உங்களுக்கு உதவ இயலும். TIS நிறுவனம் அறிவுரையாலோசனை அளிப்பதில்லை. அழைப்புக்கள் யாவும் இலவசமானவையும் இரகசியம் பேணுபவையம் ஆகும்.

## கட்டாயத் திருமணம் பற்றிய மேலதிகத் தகவலுக்கு:

உண்ணாட்டு அலுவல்கள் திணைக்கள (**Department of Home Affairs**) **www.homeaffairs.gov.au** எனும் வலைத்தளத்தில் ‘‘கட்டாயத் திருமணம்’’ என்பதைத் தேடிப் பாருங்கள்.